# ஈழ விடுதலை உணர்வெழுச்சியும் அமலமரித்தியாகிகளின் ஒத்துணர்வும்

**சூ. யே. ஜீவரட்ணம், அமதி**
BPh, BTh (Rome)
இயக்குநர்,
சமாதான நல்லிணக்கப் பணியகம்,
கிளிநொச்சி.

## முன்னுரை

அநீதியான கட்டமைப்புகளுக்கு எதிராக மட்டுமன்றி, ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்காக போராடுவதும் குரல் கொடுப்பதும் உண்மையான ஆன்மிகம் என்ற விடுதலை இறையியலின் சிந்தனை கருத்தின் உந்துதலில் ஈழ விடுதலை உணர்வெழுச்சிக்கு ஆன்மிக பலம் சேர்க்கும் காத்திரமான பங்களிப்புகளை தமிழ்க் கத்தோலிக்க திரு அவை கால ஓட்டத்தில் செய்திருக்கிறது. அடக்குமுறைகளாலும், அநீதியான ஆட்சிக் கட்டமைப்பினாலும், பிரிவினைவாதத்தாலும், ஏகாதிபத்திய செயற்பாடுகளாலும் மற்றும் பெரும்பான்மைவாத சிந்தனை போக்காலும் தமிழ் ஈழ விடுதலை உணர்வலை வீறு கொண்டெழுந்ததும், அது புரட்சிக்கு வித்திட்டது என்பதையும் யாராலும் மறுக்க முடியாது. விடுதலை இறையியலின் சிந்தனைக்கு வலுச் சேர்க்கும் இறை வார்த்தையாக "ஏன் என்னை அடிக்கிறீர்" (யோவான் 18/23) என்ற இறைவார்த்தைக்கு ஒப்ப, தமிழ் மொழி, பண்பாடு, வரலாறு நிலப்பரப்பு ஆகியவற்றின் மீதான வன்முறைகள், அழிப்புகள், ஈழத் தமிழர்களின் இருத்தல் மற்றும் வரலாற்றை இருட்டடிப்பு செய்யும் கைங்கரியங்களுக்கு எதிராக காலத்தால் நினைவு கூரவேண்டிய வரலாற்றை அமதிகளின் வாழ்வும் பணியும் ஈழத்தில் எந்தளவிற்கு நிலைநாட்டியிருக்கின்றது என்பதை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ்த் தேசிய இனத்தின் தனியடையாளம், சகவாழ்வு, சமநீதி என்ற ஒற்றைப் புள்ளியில் நின்றுதான் இந்த மொழி, பண்பாடு, வரலாறு, மற்றும் நிலப்பறிப்புப் போன்ற

அடக்குமுறைகளுக்கு பதில் அளிக்க வேண்டிய தேவைப்பாட்டை உணர்ந்து, தமிழ் தேசிய உணர்வு நிலையை உயிரோட்டமாக, வீறு கொண்ட புயலாக, தணியாத தாகமாக, நீறு பூத்த நெருப்பாக தக்க வைக்கும் செயற்பாடுகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ தமது மொழிப் புலமையாலும், அறிவியல் சிந்தனையாலும், பண்பாட்டை காக்கும் முனைப்பாலும், வரலாற்றின் தூய்மையைப் பேணவேண்டும் என்ற உத்வேகத்தாலும், நில உரிமை, வாழ்வுரிமை போன்றவற்றின் ஆர்வத்தாலும் தமது அர்ப்பணத்தை வாழ்வாக்கிய அமதிகளின் (அமலமரித் தியாகிகளின்) வரலாற்றை ஆய்வு செய்து, தூய இயூஜின் டி மசெனெட்டின் "எரியும் திரிகளாய் இருங்கள் அல்லது வெளியேறுங்கள்" என்ற வாக்குக்கு இணங்க, "ஏழைகளுக்கு நற்செய்தி நவில" என்ற விருது வாக்குக்கு ஏற்றாற்போல் இங்கு ஈழ மண்ணில் விடுதலை உணர்வுக்கு உரமூட்டியவர்களாக "ஒடுக்கப்பட்டோர் விடுதலை அடைய" என்ற இறை வார்த்தையை வாழ்ந்த பல அமதிகளின் பணிகளை நோக்குவதும் காலத்தின் தேவையும்கூட.

### 1. சுவாமி ஞானப்பிரகாசரின் மொழிவழி தேசியத்திற்கான பங்களிப்பு

சமூகவியலாளர் அன்ரனி சிமித்தின் கூற்றுப்படி 'மொழித் தேசியம்' என்பது ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசும் மக்கள் கூட்டத்தினை ஒரு தனித்துவமான தேசிய இனமாக அடையாளப்படுத்தி வரையறுக்கும் ஓர் அரசியல் மற்றும் சமூக கோட்பாடாகும். மொழிதான் ஒரு தேசத்தின் அடையாளம், ஒற்றுமை மற்றும் இறையாண்மைக்கு மிக முக்கியமான அடிப்படை என்று வாதிடுகிறது. "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" போன்ற வாக்கியங்கள் பொது வெளியிலும் நிர்வாகத்திலும் ஏன் வாழ்வியலிலும் இடம்பெற வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. பாரதிதாசனின் "உடம்பினை தமிழுக்கு உறுதி செய்வோம்" என்ற புரட்சிகர தமிழ் கவியானது மொழியில் தேசிய உணர்வை ஊட்டுகிறது. அயர்லாந்து எழுத்தாளர் தாமஸ் டேவிஸ், "சொந்த மொழி இல்லாத மக்கள் கூட்டம் அது ஒரு அரை தேசம்" எனச் சொல்வார். ஆக, மொழி

அழிப்பும் இனவழிப்பின் ஒரு வடிவம் என்பதை ஈழ விடுதலை போராட்ட வரலாறு சொல்லும். 'மொழி வளர்ப்பும் இன வளர்ப்பே' என்பதை தமிழ் மொழிப் பணியூடாக செவ்வனே செய்து சென்றவர்தான் சுவாமி ஞானப்பிரகாசர்.

ஒரு தேசத்தை அல்லது தேசிய இனத்தை வரையறுப்பதில் பல இணைக் காரணங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. அதனது நிலப்பரப்பு, மதம், இனம் ஆகிய அனைத்தையும்விட மிக வலிமையான, காத்திரமான இணைப்புப் பாலமாக இருக்கக் கூடியது மொழியாகும். ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசும் மக்கள் தங்களை ஒரு தனித்துவமான தேசிய இனமாக அங்கீகரித்து தங்களின் அரசியல் மற்றும் சமூக உரிமைகளுக்காக போராடுவதும் வாழ்வுரிமையை தக்கவைத்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல முயற்சிப்பதும் தேசியம் என்று சொல்ல முடியும். கூர்டர் ஜொகான் என்ற தத்துவவியலாளர், மொழி என்பது தகவல் தொடர்பு மட்டும் அல்ல அது ஒரு "தேசத்தின் ஆன்மா", கலாசாரம் மற்றும் இறைமையின் அடிநாதம் எனச் சொல்லுவார்.

### 1.1 மொழித் தேசியத்தின் முக்கிய கோட்பாடுகள்

தனித்துவ அடையாளத்தின் அடிப்படை மொழித் தேசியம் ஆகும். ஒரு மனிதனின் அல்லது அவன் சார்ந்த சமூகத்தின் முதன்மை, அடிப்படையான அடையாளமாக அவனது தாய் மொழியை முன்னிறுத்துகிறது. கலாசார பாதுகாப்பு, மொழியோடு இணைந்துள்ள இலக்கியம் மற்றும் கலை, பண்பாடு, மரபுகளை பிற மொழிகளின் ஆதிக்கத்தில் இருந்து பாதுகாப்பதை இந்த மொழித் தேசியம் தன் கடமையாகக் கொள்கிறது. ஆக, மொழிப் பரம்பலும், மொழி வளர்ப்பும், மொழி தூய்மையும் கலாசாரப் பாதுகாப்பை உறுதி செய்கின்றன. அரசியல் சுயாட்சி என்பது ஒரு குறிப்பிட்ட மொழி பேசும் மக்கள் தங்களின் தாய் நிலத்தில் தங்களை தாங்களே ஆளும் சுய நிர்ணய உரிமையைக் கொண்டு இருக்க வேண்டும் என இது வாதிடுகிறது.

ஈழநாட்டில் 1956 இல் கொண்டுவரப்பட்ட "சிங்களம் மட்டும் சட்டம்" (Sinhala only Act) தமிழ் பேசும் மக்களின் கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் உரிமைகளை பறித்தது. பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சி காலத்தில் பிறந்த சுவாமி ஞானப்பிரகாசரின் தமிழ்ப்பணி எப்படி இறைபணியாக, தமிழ்த் தேசிய பணியாக இருந்தது என்பதை சீர்தூக்கிப் பார்க்குமிடத்து இன முரண்பாடுகளுக்கு முன்பாக இவரது வாழ்க்கை காலம் அமைந்திருந்தாலும், இந்த இன முரண்பாடுகளுக்குள் முத்தாய்ப்பு இலங்கையின் சுதந்திரத்திற்கு முன்பே போடப்பட்டு விட்டது என்பதை முடிவாக கொள்வது தவறல்ல. பிரித்தானியர் ஆட்சியில் 1833ஆம் ஆண்டு கோல் புறூக் சீர்திருத்தம் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் சமூக மற்றும் பொருளாதார நிலைமையில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தின. அரசியல் பிரதிநிதித்துவம், இனவாரி முறைமை மற்றும் நிர்வாக சீராக்கம் போன்றவற்றின் பாதிப்பு தமிழர் தம் தனித்துவத்தை இழக்க வைத்தன. இந்தக் கால சூழ்நிலையில் "ஆங்கில முதன்மை" சிந்தனைப் போக்கு இருந்த காலகட்டத்தில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் தமிழ் பணியை ஒரு பெரும் பங்களிப்பாகவே கொள்ள முடியும்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் வரலாற்றுப் பணியானது தமிழர்களின் தனித்துவமான அடையாளத்தையும், மொழிவழி உரிமைகளையும் மீட்டெடுக்க கட்டியம் கூறியதாகக் கொள்ள இடமுண்டு. தமிழ்த் தேசியம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் மக்களின் மொழி, பண்பாடு மற்றும் வரலாற்றுத் தொடர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. சுவாமி ஞானப்பிரகாசரின் ஆய்வுகள் இந்த மூன்று தூண் களையும் எவ்வாறு பலப்படுத்தி, அரசியல் மற்றும் சமூக ரீதியாகத் தமிழ்த் தேசிய உணர்வை விதைத்தன என்பதைப் பின்வரும் பிரிவுகள் விளக்குகின்றன.

**அ) மொழியின் தொன்மையை உலகிற்கு நிறுவுதல்**

**சொற்பிறப்பு ஒப்பியல் மொழி ஆய்வு**

இலத்தீன், கிரேக்கம் உட்பட 18 மொழிகளில் புலமை பெற்றிருந்த சுவாமி ஞானப்பிரகாசர், தமிழ் மொழியே

மொழிகளுக்கு வேராக இருந்தது என்பதை ஒப்பியல் ஆய்வுகள் மூலம் நிறுவிக் காட்டினார். தமிழின் வேர்ச் சொற்களைக் கண்டறிந்து அவற்றை உலகளாவிய பிற மொழிகளோடு ஒப்பிட்டு நிரூபிப்பதே அவரது முதன்மை நோக்கமாகும். சொற்களின் ஒலியொப்புமையை மட்டுமன்றி இலக்கிய சொல்லாட்சி மற்றும் வரலாற்று பின்னணியையும் கருத்தில் கொண்டு வேர்களைத் தீர்மானிக்க வேண்டும் என்ற நியதியை இவ் ஒப்பியல் அகராதி வலியுறுத்துவது தமிழின் முதன்மையையும் தனித்துவத்தையும் சிறப்பையும் உலக அரங்கில் உயர்த்தியது.

**சுயமரியாதை உணர்வு**

ஒரு தேசிய இனத்தின் அடிப்படை ஆயுதம் அதன் மொழியே ஆகும். பிற மொழிகளின் ஆதிக்கத்திலிருந்து தமிழை விடுவித்து, தமிழின் முதன்மையையும், தொன்மையையும், தனித்துவத்தையும் காத்ததனூடாக தமிழர்களிடம் மொழி சார்ந்த பெருமிதத்தையும் சுயமரியாதையையும் அவர் உருவாக்கினார் எனக் கொள்ளலாம்.

**ஆ) ஈழத் தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை மறைமுகமாக அரண் செய்தலும் பண்பாட்டு மூலங்களை மீட்டெடுத்தலும்**

**வரலாற்று ஆதாரங்கள்**

யாழ்ப்பாணத்தின் குடியேற்ற வரலாறு, ஈழத்துத் தமிழ் மன்னர்களின் ஆட்சிமுறை குறித்துப் பல வரலாற்று ஆவணங்களை ஆராய்ந்து எழுதினார். அதிலும் குறிப்பாக உலகளாவிய அறிஞர்களின் பார்வைக்காகப் பல முக்கிய வரலாற்றுப் பதிவுகளை ஆங்கிலத்திலும் வெளியிட்டார். குறிப்பாக "யாழ்ப்பாண சரித்திர ஆராய்ச்சி" என்ற நூல் ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் மற்றும் தமிழர்ககளின் இறையாண்மை குறித்து ஆவணங்களின் அடிப்படையில் எழுதப்பட்டதாக சொல்லப்படுகிறது. இலங்கையின் பூர்வகுடிகள் தமிழர்கள் என்பதையும், அவர்களின் பாரம்பரிய தாயகம் வடக்கு கிழக்கு நிலப்பரப்பு என்பதையும் நிறுவ இவரது வரலாற்று ஆய்வுகள் வலுவான சான்றுகளாக அமைந்தன. இதுவும் பிற்காலத்தில் "தமிழ்த் தாயகம்" என்ற தாயக உரிமை கோரும் அரசியல் முழக்கத்திற்கு வலுச்சேர்திருக்கலாம்.

“பண்டைத் தமிழர்” போன்ற ஆய்வு நூல்கள் மூலம் தமிழர்களின் தொன்மையான சமூகக் கட்டமைப்பு, பண்பாடு மற்றும் சமூக பொருளாதார வாழ்வியலை ஆவணப்படுத்தியமையானது பண்டைய தமிழர் நாகரிகம் முதன்மைப்படுத்தப்பட்டது என்பதோடு அடையாள மீட்பாக காலனியாதிக்கச் சூழலில் சிதைந்து போயிருந்த தமிழர்களின் வரலாற்றுப் பெருமைகளைத் தேடி எடுத்து ஆவணப்படுத்தியதன் மூலம், “நாம் ஒரு தனித்துவமான தேசிய இனம்” என்ற கூட்டு உணர்வைத் தமிழர்களிடம் தோற்றுவித்தது எனக் கருத இடமுண்டு.

**இ) சமூக விளிம்புநிலை மக்களின் உரிமைப் பணி (சமூகத் தேசியம்)**

**அனைவரையும் உள்ளடக்கிய தேசியம்**

ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காக தன்னை அவர்களோடு அடையாளப்படுத்தி அவர்களுக்கான நிலங்களை வாங்கி குடியமர்த்தியமை கிழக்கு வலிகாமம் யூலனூர் கிராமம். சமூக நீதியை நிலைநாட்ட சாதியக் கட்டமைப்பால் பிளவுபட்டிருந்த சமூகத்தை ஒருங்கிணைக்க முயன்றமை இன்னுமொரு சமூகப்பணி. உண்மையான தேசிய உணர்வு என்பது அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கியதே என்பதைத் தன் களப்பணி மூலம் நிரூபித்தார்.

இறுதியாக சுவாமி ஞானப்பிரகாசரின் ஆய்வுகள் வெறும் காகிதங்களிலல்லாமல் ஒரு ஒடுக்கப்பட்ட இனத்திற்குத் தேவையான வரலாற்று ஆயுதமாக மாறின. மொழிப் பற்று, வரலாற்றுத் தன்னுணர்வு மற்றும் தாயகக் கோட்பாடு ஆகியவற்றுக்குத் தத்துவார்த்த ரீதியான அடித்தளமிட்ட அவரது அறிவுசார் பணிகள் அனைத்தும், தமிழ்த் தேசிய இயக்கத்தின் பிரிக்க முடியாத வரலாற்றுப் பேராயுதங்களாக இன்றும் திகழ்கின்றன.

## 2. பண்பாட்டு அடையாளம் (Cultural Symbolism)

### 1. அருட்தந்தை திமொத்தி லோங் அமதி (Fr. Timothy M.F. Long, OMI) அவர்களின் பங்களிப்பு

யாழ்ப்பாணப் பொது நூலகத்தை சர்வதேசத் தரத்துடன் உருவாக்குவதில் முன்னின்ற ஐரோப்பிய கத்தோலிக்கத் துறவியான அருட்தந்தை திமொத்தி லோங் அமதி அடிகளாரின் பங்களிப்பு, பிற்காலத்தில் ஈழத் தமிழர்களின் அரசியல், அறிவுசார் மற்றும் தத்துவார்த்தத் ''தமிழ்த்தேசிய'' உருவாக்கத்திற்கு மிக உன்னதமான அடித்தளமாக அமைந்தது எனக் கருதுவது தவறல்ல. மத எல்லைகளைக் கடந்து, ஒரு தேசத்தின் அறிவுப் பொக்கிசத்தை உருவாக்க அவர் ஆற்றிய பணிகள், தமிழ்த்தேசிய உணர்வை எவ்வாறு ஆழமாகப் பலப்படுத்தின என்பதைப் பின்வரும் கோணங்களில் ஆய்வு செய்யலாம்.

### அ) அறிவுசார் தேசியம் (Intellectual Nationalism) மற்றும் கல்வி அரண் அறிவுசார் ஆயுதம்

ஒரு தேசிய இனத்தின் விடுதலை அல்லது தன்னுரிமைப் போராட்டம் என்பது வெறும் ஆயுதங்களோடு மட்டும் முடிந்துவிடுவதில்லை. மாறாக, அது தத்துவார்ந்த, அறிவுசார் பலத்தைக் கொண்டிருக்க வேண்டும். யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராக இருந்த லோங் அடிகளார், கல்வி மற்றும் வாசிப்பின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்தவர். அவர் வெறும் சாதாரண ஒரு நூலகத்தை அன்றி, சர்வதேசத் தரத்திலான ஒரு மையத்தை உருவாக்க அயராது உழைத்தார். இதன் மூலம் உருவான தமிழ் அறிஞர்கள், பேராசிரியர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் பின்னாளில் தமிழ்த்தேசியக் கோட்பாட்டை சர்வதேச சமூகத்திற்குக் கொண்டு செல்லும் அறிவுத்திறனைப் பெற்றனர்.

### உலகளாவிய அங்கீகாரம் (International Relations)

லோங் அடிகளார் பல நாடுகளுக்குப் பயணம் செய்து, சர்வதேச இராஜதந்திரிகளிடமிருந்து நூலகத்திற்கான நிதியையும் உதவிகளையும் ஒருங்கிணைத்த திறமையானது

ஈழத்துத் தமிழ் மக்களின் கல்வி மற்றும் பண்பாட்டுத் தேவையை சர்வதேச மயப்படுத்தியது. தமிழர்கள் ஒரு தன்னாட்சியான அறிவுசார் சமூகம் என்பதை உலக அரங்கிற்கு உணர்த்த இவரது உலகளாவிய தொடர்பு உதவியது.

லோங் அமதி அடிகளார் மற்றும் குழுவினரின் முயற்சியால் தமிழ் மொழி மற்றும் வரலாற்றுப் பூர்வகுடி ஆதாரங்களைப் பாதுகாக்கும் நோக்கோடு இந்த நூலகம் வெறும் புத்தகக் கூடமாக இல்லாமல், அரிய ஏட்டுச்சுவடிகள், வரலாற்று ஆவணங்கள், பழைமையான பத்திரிகைகள் ஆகியவற்றின் வரலாற்று ஆவணக் காப்பகமாக மாறியது. இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வரும் "பூர்வகுடி தேசிய இனம் தமிழினம்" என்பதற்கான வரலாற்று மற்றும் நிலவியல் சான்றுகள் அனைத்தும் இந்த நூலகத்திலேயே திரட்டப்பட்டன. இந்த ஆவண ஆதாரங்களே பிற்காலத்தில் தமிழ்த்தேசியத்தின் அரசியல் நகர்வுகளுக்கு பெரும் சான்றாதாரங்களாக விளங்கின என்பது பொய்யல்ல.

லோங் அமதி அடிகளார் ஒரு கத்தோலிக்கத் துறவியாக இருந்தபோதிலும், மதசார்பற்ற தமிழின ஒருங்கிணைப்பாக (Secular Nationalism) மதங்களைக் கடந்த தமிழ் என்பதை பறைசாற்ற சைவ மற்றும் தமிழ் மரபுகளைப் போற்றிப் பாதுகாக்கும் யாழ் நூலக உருவாக்கத்தில் தீவிரமாகப் பங்களித்தார். தமிழ்த் தேசியம் என்பது மதம், சாதி என்பவற்றைக் கடந்து, மொழி மற்றும் பண்பாட்டு அடிப்படையில் மக்களை ஒருங்கிணைப்பதாகும். அந்த வகையில், ஒரு கிறிஸ்தவ மேலைத்தேய துறவி தமிழரின் பண்பாட்டுப் பொக்கிஷத்தை உருவாக்கத் தலைமை தாங்கியமை, மதசார்பற்ற கூட்டுத் தமிழ்த் தேசிய உணர்வை வளர்க்கும் முன்னோடியாகவும் அடையாளமாகவும் அமைந்தது.

### ஆ) நூலக அழிவும் தமிழ்த் தேசியப் போக்கின் தீவிரமும்

#### அழிவின் கூட்டுக் காயம்

லோங் அடிகளார் போன்ற பெரியோர்கள் இரத்தமும் வியர்வையும் சிந்தி, "ஆசியாவின் மிகப்பெரிய நூலகங்களில்

ஒன்று'' எனப் போற்றப்படும் அளவுக்கு வளர்த்தெடுத்த யாழ். நூலகம் 1981 ஜூன் 1 அன்று சிங்கள பேரினவாதப் படைகளால் திட்டமிட்டுத் தீக்கிரையாக்கப்பட்டது.

**தேசிய எழுச்சி**

லோங் அடிகளாரின் கடின உழைப்பால் உருவான அறிவுக் கோவில் எரிக்கப்பட்டபோது, அது ஒட்டுமொத்தத் தமிழினத்தின் மீதான கலாசார இனப்படுகொலையாகவே (Cultural Genocide) பார்க்கப்பட்டது. இந்த வரலாற்று வடு, ஈழத் தமிழர்கள் மத்தியில் "தமக்கென ஒரு தனி அரசு/தேசம் இல்லாவிட்டால் தமது அறிவும் வரலாறும் முற்றாக அழிக்கப்பட்டுவிடும்'' என்ற நியாயமான தமிழ்த் தேசிய உணர்வை விஸ்வரூபம் எடுக்கச் செய்தது.

இறுதியாக அருட்தந்தை லோங் அமதி அடிகளார் தனது வாழ்நாளை அர்ப்பணித்து யாழ் நூலகத்தை அமைத்ததன் பின்னணியில் அரசியல் நோக்கங்கள் இல்லாவிட்டாலும், அவர் விதைத்த அறிவுசார் அடித்தளமும், திரட்டிய வரலாற்று ஆவணங்களும் தமிழர்களை ஒரு பலமிக்க தேசிய இனமாக நிமிரச் செய்தன. நூலகத்தின் முன்னால் இவரது திருவுருவச் சிலை நிறுவப்பட்டதே இவரது மாபெரும் தமிழ்ப் பணிக்கு ஈழத்தமிழினம் காட்டிய நன்றிக் கடனாகும்.

### 2. 2 யாழ்ப்பாண 'தொடர்பகம்' ஞானப்பிரகாசர் நூலகத்தின் பங்களிப்பு

இலங்கைப் பேரினவாத அரசால் ஈழத் தமிழர்கள்மீது நிகழ்த்தப்பட்ட "கல்வியழிப்பு'' அல்லது 'அறிவுசார் இனப் படுகொலைக்கு' (Scholasticide / Epistemicide) எதிரான சிவில் சமூகத் தற்காப்புப் போராட்டமாக, யாழ்ப்பாண "தொடர்பகம் சுவாமி ஞானப்பிரகாசர் நூலகம்'' ஆற்றிய வரலாற்றுப் பணி மிக முதன்மையான பணியாகும். யுத்த காலங்களில் தமிழ் மக்களின் அறிவுசார் வேர்களைத் தகர்க்கத் திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒடுக்குமுறைகளுக்கு மத்தியில், இந்த நூலகம் எவ்வாறு தமிழ் அறிவுசார் புகலிடமாகவும், தற்காப்பு அரணாகவும் விளங்கியது என்பதைப் பின்வரும் பகுதி விளக்குகிறது.

**அ) கல்வியழிப்புக்கு (Scholasticide) எதிரான தற்காப்புப் போராட்டமும் நூலக எரிப்பின் பின்னரான அறிவுப் பஞ்சமும்**

1981 ஜூன் 1ஆம் திகதி அன்று யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்ட நிகழ்வு என்பது வெறும் கட்டிட அழிப்பு அல்ல. அது தமிழர்களின் ஒட்டுமொத்த வரலாற்று ஆவணங்களையும் சிந்தனை மரபையும் வேரறுக்க முயன்ற ஒரு "கல்வியழிப்பு" (Scholasticide) நடவடிக்கையாகும். பொது நூலகம் அழிக்கப்பட்டு, போர்க்காலத்தில் ஏனைய கல்வி நிறுவனங்களும் இராணுவமயமாக்கப்பட்ட சூழலில், யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியில் அமைந்திருந்த அமலமரித்தியாகிகளின் தொடர்பக வளாகத்தில் இருந்த சுவாமி ஞானப்பிரகாசர் நூலகம் தமிழர்களின் முதன்மையான அறிவுசார் புகலிடமாக மாறியது. அரசு திட்டமிட்டு உருவாக்கிய அறிவுசார் வெற்றிடத்தை பகுதியளவிலேனும் நிரப்பியதன் மூலம் இது தமிழ்த்தேசத்தின் அறிவுப் பசியை ஓரளவிற்கேனும் தீர்த்தது எனலாம்.

**ஆ) வரலாற்று ஆதாரங்களையும் அரிய ஆவணங்களையும் பாதுகாத்தல் அழிவுறா ஆவணக் காப்பகம்**

இந்த நூலகத்தில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் தன் வாழ்நாளில் சேகரித்த அரிய வரலாற்று ஏடுகள், சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியின் மூலப்பிரதிகள் மற்றும் பூர்வகுடி வரலாற்றுச் சான்றுகள் போன்றன பாதுகாக்கப்பட்டு வந்தன. தேசிய இருப்புக்கான சான்றுகளைப் பேணி அடுத்த தலைமுறையினருக்குக் கொடுக்கும் வரலாற்றுக் கடமையையும் இந்நூலகம் செய்கிறது. ஓர் இனத்தின் தேசியம் என்பது அதன் வரலாற்றுத் தொடர்ச்சியைப் பொறுத்தது. போர்க்கால இடப்பெயர்வுகள் மற்றும் குண்டு வீச்சுகளுக்கு மத்தியிலும் இந்த அரிய ஆவணங்கள் அழியாமல் பாதுகாக்கப்பட்டமை, "தமிழர்கள் தன்னாட்சியுரிமை கொண்ட ஒரு பூர்வகுடித் தேசிய இனம்" என்ற அரசியல் கோரிக்கைகளுக்கான தத்துவார்த்த மற்றும் வரலாற்று ஆதாரங்களை எதிர்காலத் தலைமுறைக்குக் கடத்த உதவியது.

**இ) போர்க்காலத் தடைகளைத் தாண்டிய அறிவுசார் உற்பத்தி ஆராய்ச்சியாளர்களுக்கான களம்**

போர்க்காலத்தில் மின்சாரம், உலகளாவிய தொடர்புச் சாதனங்கள் மற்றும் புத்தக இறக்குமதிகள் முற்றாகத் தடைப்பட்டிருந்த காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் தமிழ்த்தேசிய உணர்வாளர்களுக்கும் சிந்தனையாளர்களுக்கும் இந்நூலகம் ஒரு நல்வாய்ப்பாக அமைந்தது.

தமிழ்த் தேசிய சிந்தனைத் தொடர்ச்சியை தக்கவைக்க அதை நீர்த்துப்போகா வண்ணம் உயிரோட்டமாக வைத்திருக்க குறிப்பாக யுத்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமிழர்களின் அறிவுசார் உற்பத்தியும், இலக்கியப் படைப்புகளும், வரலாற்று ஆய்வுகளும் தடையின்றித் தொடர்வதற்கு இந்நூலகம் பங்களிப்புச் செய்தது. இது ஆயுதப் போராட்டத்திற்கு இணையாகத் தமிழினத்தின் அறிவுசார் தேசியம் வீழ்ந்துவிடாமல் தற்காத்து தனது காத்திரமான பணியை செய்தது, இன்றும் செய்கின்றது.

**ஈ) கத்தோலிக்கத் திருச்சபை அமைப்பு ரீதியான ஒரு காப்பரண்**

அமதிகள் சபைத் துறவிகளால் நிர்வகிக்கப்பட்டதால், இந்தத் தொடர்பக நூலக வளாகம் ஒரு பாதுகாப்பு மண்டலமாக போர்க்காலக் கடுமையான தணிக்கைகள் மற்றும் இராணுவச் சோதனைகளிலிருந்து ஓரளவிற்குப் பாதுகாப்பைப் பெற்றது. இந்த நூலகமும் தொடர்பக வளாகமும் வெறும் வாசிப்புத் தளமாக மட்டுமன்றி, போர்க்கால சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் மதகுருமார்கள் ஒன்றுகூடித் தமிழர்களின் மனித உரிமை குறித்து கலந்துரையாடும், ஆவணப்படுத்தும் ஒரு மையமாகவும் செயற்பட்டது.

இறுதியாக, இலங்கை பேரினவாத அரசு தமிழர்களின் கலாசார, கல்வி அடையாளங்களை அழிப்பதன் மூலம் அவர்களின் தேசிய உணர்வை ஒடுக்க நினைத்தபோது, அதற்கு

எதிரான அறிவுசார் தற்காப்புப் போராட்டத்தை (Intellectual Resistance) தனக்கே உரித்தான பாணியில் தொடர்பகம் சுவாமி ஞானப்பிரகாசர் நூலகம் ஆற்றியது. பேரினவாதத்தின் கல்வியழிப்பு முயற்சிக்கு ஆளாகாமல் தமிழரின் அறிவு மற்றும் வரலாற்று மரபைக் காப்பாற்றியதன்மூலம், இந்நிலப்பரப்பில் தமிழ்த்தேசியக் கருத்தியல் மேலும் ஆழமாக வேரூன்ற இது தன் பங்களிப்பினை வழங்கியது எனலாம்.

### ௩. அரசியல் செயற்பாட்டுவாதம் (Political Activism)

அருட்தந்தை ஆபாரணம் சிங்கராயர் அமதி இலங்கையின் நவீன தமிழ்த்தேசிய எழுச்சியின் ஆரம்பக் கட்டத்தில் மிக முக்கிய பங்கு வகித்த ஒரு ஆளுமை. பல விமர்சன பார்வைகள் அவரது செயற்பாட்டில், வாழ்வில் முன்வைக்கப்பட்டாலும் அவரது அரசியல்சார் செயற்பாடு மற்றும் சிந்தனை தமிழ் தேசியத்திற்கு ஒத்துணர்வை கொடுத்தது என்று சொல்வது தவறல்ல. 1970களின் பிற்பகுதியிலும் 1980களின் ஆரம்பத்திலும், கிறிஸ்தவ "விடுதலை இறையியல்" (Liberation Theology) கோட்பாட்டையும், பேரினவாத அரசுக்கு எதிரான சிவில் சமூகப் போராட்டத்தையும் இணைத்து அவர் ஆற்றிய பணிகள் தமிழ்த் தேசிய வரலாற்றில் ஒரு வினையூக்கியாக அமைந்தன.

#### அ) களப் போராட்டமும் அறிவுசார் விழிப்புணர்வும்

அருட்தந்தை ஆபரணம் சிங்கராயர், அமதி, வெறும் ஆன்மீகப் பணியோடு நின்றுவிடாமல், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய சிவில் அமைப்புகளுடன் இணைந்து தீவிரமாகச் செயல்பட்டார். இனவிடுதலையை தன் சொல்வன்மையால் விதைத்து வந்த சிறந்ததோர் ஆளுமை அவர். விடுதலை இறையியலின் தத்துவப்படி, ஒடுக்கப்பட்ட தமிழ் இளைஞர்களுக்கும், அரச படைகளால் தேடப்பட்ட ஆரம்பகால அரசியல் போராளிகளுக்கும் தஞ்சம் வழங்கி மக்களுக்கான அரணாக நின்று ஆதரவளித்தார். இதனால் அவரது தீவிர அரசியல் செயல்பாடுகள் இலங்கை அரசின் நேரடிக் கண்காணிப்புக்கு உள்ளாகி, அவர் கைது

செய்யப்பட்டு வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டமை தமிழ்த் தேசிய வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. தமிழ் போராளிகளுக்கு ஆதரவளித்தார் மற்றும் தகவல்களை மறைத்தார் என்பதே அவர் மீதான அரசு படைகளின் குற்றச்சாட்டாகும். 1983 கறுப்பு யூலை இனக்கலவரத்தின்போது, வெலிக்கடைச் சிறையிலிருந்த சிங்களக் கைதிகள், சிறைக்காவலர்களின் ஆதரவுடன் 53 தமிழ் அரசியல் கைதிகளைத் திட்டமிட்டுப் படுகொலை செய்தனர். இந்தக் கரிய வரலாற்றின் சாட்சியம் அருட்தந்தை சிங்கராயர் அமதி அவர்கள்.

**ஆ) தமிழ்த்தேசியக் கருத்தியலுக்கான பங்களிப்பு**

அருட்தந்தை சிங்கராயரின் செயல்பாடுகளும் தியாகமும் தமிழ்த்தேசியத்தை இரு முக்கிய தளங்களில் பலப்படுத்தின எனலாம்.

**1. மதசார்பற்ற தேசிய ஒருமைப்பாடு**

இந்து மற்றும் கிறிஸ்தவத் தமிழர்கள் மத்தியில் இருந்த மத எல்லைகளைக் கடந்து, தமிழர்களிடையே கூட்டுத் தேசிய அடையாளத்தை வலுப்படுத்தியது.

**2. தமிழ் திருஅவையின் எண்ண மாற்றம்**

தமிழ் மக்களின் துயரங்களை உற்று நோக்க இவரது கைது பெரும் தூண்டுகோலாக அமைந்தது. “அநீதிக்கு முன்னால் நடுநிலை வகிப்பது ஒடுக்கு முறைக்கு ஆதரவளிப்பதாகும்” என்ற எண்ணத்தை அடுத்த தலைமுறை தமிழ் குருக்கள் மத்தியில் விதைத்திருந்தது. அருட்தந்தை சிங்கராயர் அமதி அவர்களின் வாழ்வு தொடர்பில் பல விமர்சனங்கள் இருந்தாலும் அவர் தனது சமயப் பாதுகாப்பையும் தாண்டி அரசியலில் துணிச்சலுடன் களமிறங்கிய ஒரு தியாகி. சிறைவாசம், படுகொலை முயற்சிகள் மற்றும் அரச பயங்கரவாதம் ஆகியவற்றை எதிர்கொண்டு அவர் காட்டிய உறுதி, ஈழத்தமிழர்களின் தன்னாட்சி மற்றும் மனித உரிமைப் போராட்டத்தை சர்வதேச அளவில் நியாயப்படுத்துவதற்கான மிக வலுவான அடித்தளமாக அமைந்தது.

## 4. பன்மைத்துவ விடுதலையும் உடன் இருப்பும் ஓர் ஒத்துணர்வே"

### 4.1. உள வள ஆலோசனையும் துணையிருப்பும்

இனவிடுதலை போராட்ட காலத்தில் இழப்புக்கள், அடாவடித்தனங்கள், அடக்குமுறைகள், தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட சூழ்நிலையில் வலி உணர்ந்த தேசத்திற்கு ஒத்தடம் கொடுக்க வேண்டிய காலச் சூழ்நிலையில் அமலமரித்தியாகிகளின் உளநல ஆற்றுப்படுத்தும் நிலையங் களின் பங்களிப்பு காலத்தால் நினைவு கூறப்படவேண்டியது. "எவ்வலி சுமந்தும் எம்மின விடுதலை கேட்போம்" என்ற உணர்வில் இருந்த எம் மக்களின் மனநல வாழ்விற்கு பங்களிப்பு என்பது தமிழ் தேசிய உணர்விற்கு கொடுத்த ஒத்தடம் என்றால் அது மிகையல்ல. அதிலும் குறிப்பாக வன்னி பெரும் நிலப்பரப்பில் ஆழக் காலூன்றி நின்றது அமதிகளின் உளவளநிலையம் "அன்னை இல்லம்".

#### அ) கூட்டு மனச்சோர்வு மற்றும் பேரதிர்ச்சியிலிருந்து மக்களைக் மீளெடுத்தல்

#### மக்களின் மன உறுதியைப் பேணுதல்

தொடர்ச்சியான இடப்பெயர்வுகள், பேரழிவை விளைவித்த போர்த் தாக்குதல்கள் மற்றும் தங்களின் பாரம்பரிய வீடுகளை இழந்தமையால் தமிழ் மக்களிடையே ஒரு பெரும் "கூட்டு மனச்சோர்வு" (Collective Depression) சூழ்ந்திருந்தது. மக்களின் இந்த மறைமுக உளவியல் காயங்களுக்கு மருந்திட்டு, அவர்கள் நம்பிக்கையோடு வாழ்வதற்கான மன வலிமையை "அன்னை இல்லம்" தந்து நின்றது.

#### அடுத்த தலைமுறையைக் குணப்படுத்துதல்

போரின் கொடூரத்தால் நூற்றுக்கணக்கான தமிழ் குழந்தைகள் தங்களின் பெற்றாரை இழந்து அனாதரவாக்கப் பட்டனர். இந்த பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தனிநபர் மற்றும் குழு உளவள ஆலோசனைகளை வழங்கி, தமிழ் சமூகத்தின் எதிர்காலத் தலைமுறையைப் பாதுகாத்து அரவணைத்தமை அவ்வாறான ஆதரவற்ற குழந்தைகளை ஒரு காத்திரமான தலைமுறையாக வளர்க்கும் நிலையமாக அமலமரித்தியாகிகளின் "அமல அன்னை அன்பகம்"

துலங்கியதும் பதிவிடப்படவேண்டியது. தங்களின் தனிப்பட்ட துயரங்கள் மற்றும் குடும்பப் பிரச்சினைகளையும் வலி, பயம் மற்றும் ஆறாத் துயரங்களை எல்லாம் வெளிப்படையாகப் பேசி மௌனத்தைக் கலைத்து ஆறுதல் பெறுவதற்கான ஒரு நம்பிக்கைச் சூழலை சாந்தியகம், அன்பகம், அன்னை இல்லம், வளர்பிறை, அமைதித்தென்றல், OBTEC, அமதிக்கரங்கள் போன்ற அமலமரித்தியாகிகளின் பணிமையங்கள் உருவாக்கியிருந்தன.

**மனநல மருத்துவர் பற்றாக்குறையை ஈடுசெய்தல்**

தீவிர போர்க்காலச் சூழலின் காரணமாக வன்னிப் பகுதியில் மனநல மருத்துவர்கள் (Psychiatrists) எவரும் இருக்கவில்லை. இந்த இக்கட்டான காலகட்டத்தில், கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை மற்றும் ஏனைய மருத்துவமனைகளில் அன்னை இல்லத்தின் பயிற்சி பெற்ற ஆலோசகர்கள் தங்களின் அர்ப்பணிப்பான சேவையை வழங்கினர். மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்ட நோயாளி களுக்கு உரிய உளவியல் சிகிச்சை அளித்து, போர்க்காலத்தில் மருத்துவத் துறைக்கு ஒரு பலமிக்க தூணாகத் திகழ்ந்தது.

1996ல் அன்னை இல்லம் உருவாக்கப்பட்ட நாள்முதல், 2004 சுனாமி பேரழிவு மற்றும் 2009 மே மாத இறுதிப் போர்வரை எத்தனையோ இடப்பெயர்வுகள் மற்றும் இராணுவ நெருக்கடிகளுக்கு மத்தியிலும் வன்னி மக்களை ஒருபோதும் கைவிடவில்லை. பொதுமக்கள் சந்தித்த மிகக் கடினமான இறுதிச் சவால்கள்வரை அவர்களுடனேயே களத்தில் நின்று உளவியல் முதலுதவிகளை வழங்கிச் சேவையாற்றியது. அமலமரித்தியாகிகளின் குருக்கள் இறுதிவரை மக்களோடு மக்களாக நின்று முள்ளிவாய்க்காலின் முனகல்களையும் அழுகுரல்களையும் கேட்ட உயிர் உள்ள சாட்சிகளாய் இருக்கின்றனர் என்பது குறிப்பிடதக்கது. போர் முனைகளின் நடுவே, வன்னித் தமிழ் மக்கள் தங்களின் கடுமையான வாழ்வியல் சவால்களை எதிர்கொண்டு, மனநலம், அடையாளம் மற்றும் வாழ்வுக்கான நம்பிக்கையை இழந்துவிடாமல்

காப்பதில் அன்னை இல்லம் ஒரு இணையற்ற மனிதாபிமானப் பேரரணாகத் தன் முத்திரையைப் பதித்தது.

**4.2 'அமதிபுரம் கிராமம்' – வலி சுமந்த மக்களுடனான உடனிருப்பின் அடையாளம்**

அமதிபுரம் கிராமத்தின் உருவாக்கம், இலங்கை உள்நாட்டுப் போர்க்காலத்தில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப, அமல மரி தியாகிகள் சபை மேற்கொண்ட ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மனிதாபிமானப் பணியாகும். கத்தோலிக்கத் துறவிகளான இவர்களின் தமிழ் தேசிய உணர்வு மற்றும் தமிழ் மக்களின் துயரங்களுடனான ஆழமான ஒத்துணர்வு ஆகியவற்றின் வெளிப்பாடாகவே இக்கிராமம் 1977ன் இனக்கலவரத்தின் பின்னணியில், அவர்கள் பெயரில் 'அமதி'புரம் என உருவெடுத்தது. மந்தையின் மணமறிந்த மேய்ப்பர்களாக தங்களை அம்மக்களோடு அடையாளப்படுத்தி அதே இன்னல்களை தாங்களும் சுமந்து அக்கிராமத்தில் அமதிகளின் குருமட மாணவர்களுக்கான, எதிர்கால துறவிகளுக்கான சூழமைவு உருவாக்கத்தை (Contectual Formation) கொடுத்தமை கோடிட்டுக் காட்டப்படவேண்டியது. இக்கிராம உருவாக்கத்தின் பின்னணியில் உள்ள முக்கியத்துவத்தை பின்வருமாறு நோக்கலாம்.

**அ) வரலாற்றுப் பின்னணியும் குடியேற்றமும்**

இலங்கையின் வடக்கு – கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட தொடர் இடப்பெயர்வுகள் மற்றும் இராணுவ நெருக்குவாரங்கள் காரணமாகவும் குறிப்பாக தெற்கிலிருந்தும் மலையகத்திலிருந்தும் வன்முறையாலும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தங்களின் பூர்வீக நிலங்களை இழந்து ஏதிலிகளாக மாறினர்.

**உள்ளக வன்முறையால் அகதிகளானோர்க்கான மறுவாழ்வு**

போர்ச் சூழலால் சிதறடிக்கப்பட்டு, உறைவிடமின்றித் தவித்த தமிழ் குடும்பங்களை ஒன்றிணைத்து அவர்களுக்குப்

பாதுகாப்பான வாழ்விடத்தை அமைத்துக் கொடுப்பதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாக இருந்தது. யாழ் அமல மரி தியாகிகள் சபை தங்களுக்குச் சொந்தமான அல்லது பொதுவான மற்றும் தங்களின் பராமரிப்பிலிருந்த நிலப்பரப்புகளை, போரினால் பாதிக்கப்பட்ட ஏழை தமிழ் மக்களின் குடியிருப்புக்காக பங்கிட்டுக் கொடுத்தமையும் அத்தோடு வாழ்வாதார வழிகளையும் மேற்கொண்டமையையும் குறித்துக்காட்டவேண்டும்.

**ஆ) தமிழ் தேசிய உணர்வும் ஒத்துணர்வும்**

அமலமரித்தியாகிகள் சபையின் ஆன்மிக நோக்கம் "ஏழைகளுக்கும் கைவிடப்பட்டோருக்கும் நற்செய்தி அறிவித்தல்" என்பதாகும். ஈழத்துச் சூழலில், ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் அவர்களின் இருப்புக்காகவும் குரல் கொடுப்பதே உண்மையான ஆன்மிகப் பணி என்பதை உறுதியாக அவர்கள் நம்பியிருந்தனர்.

**மக்களுடன் வாழ்வை பகிர்ந்துகொள்ளுதல்**

போர்க்காலத்தின் மிகக் கடினமான ஆபத்தான சூழ்நிலைகளிலும் (Difficult Missions), மக்களைக் கைவிடாது அவர்களுடனேயே தங்கி நின்று, மக்களின் வலிகளைத் தங்களின் வலிகளாகத் துறவிகள் ஏற்றுக்கொண்டமை.

**அடையாளப் பாதுகாப்பு**

தமிழ் மக்களின் நில உரிமை பறிக்கப்பட்டு, அவர்களின் தேசிய அடையாளம் சிதைக்கப்பட முயன்ற சூழலில், ஒரு புதிய கிராமத்தை உருவாக்கி அவர்களுக்கு நில உரிமைகளை வழங்குவதன் மூலம் தமிழ் தேசிய இருப்பை நிலைநிறுத்த அமதிபுரம் உதவியது.

**மனிதாபிமான தியாகம்**

தமிழ் மக்களின் அரசியல், சமூக உரிமைகளை முன்னிலைப்படுத்தி அமலமரித் துறவிகள் பலர் பணியாற்றியுள்ளனர். இத்தகைய சமூகநேய உணர்வின்

நீட்சியாகவே அமதிபுரம் போன்ற சமூகக் குழுமங்கள் கட்டமைக்கப்பட்டன.

**இ) சமூக பொருளாதார மறுவாழ்வு**

அமதிபுரம் கிராமம் வெறும் வீடுகளைக் கொண்ட ஒரு பகுதியாக அல்லாமல், சுயசார்புடைய ஒரு தமிழ் கிராமமாக உருவாக்கப்பட்டது.

**வாழ்வாதார உதவிகள்**

விவசாயம், கைத்தொழில் மற்றும் சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குவதன்மூலம் இடம்பெயர்ந்த மக்கள் பொருளாதார ரீதியாகத் தங்களின் கால்களில் நிற்க அமதிகள் வழிகாட்டி முயன்றனர்.

**கல்வியும் ஆன்மிகமும்**

கிராமத்துச் சிறுவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு பள்ளிக்கூடங்கள், முன்பள்ளிகள் மற்றும் மக்களின் மன அமைதிக்கான ஆன்மிக மையங்கள், வழிபாட்டுத் தலங்கள் இக்கிராமத்தில் நிறுவப்பட்டன. அமதிபுரம் கிராமத்தின் உருவாக்கம் என்பது வெறும் நிலப்பகிர்வு அல்ல. அது தமிழ் மக்களின் சுயமரியாதை, நில உரிமை மற்றும் தேசிய வாழ்வுரிமையைப் பாதுகாப்பதற்காக அமல மரித் தியாகிகள் தங்களின் உன்னத ஒத்துணர்வு மற்றும் மனிதாபிமானப் பணிமூலம் வரலாற்றுத் தடமாகும்.

**4. 3. நீதி, சமாதான நல்லிணக்கப் பணியகம்**

போவென்ச்சுரா டி சோசா சாண்டோஸ் என்ற எழுத்தாளரினால் எழுதப்பட்ட "கடவுள் ஒரு மனித உரிமை ஆர்வலராக இருந்தால்" (If God Were a Human Rights Activist) என்ற புத்தகம் மேற்கத்தேய மதச்சார்பற்ற மனித உரிமை அமைப்புக்கள் உலகளாவிய சுரண்டல் மற்றும் அநீதிகளை தடுக்கத் தவறிவிட்டன என்று வாதிடுகின்றது. கடவுள் ஒரு மனித உரிமை போராளியாக இருந்தால் அவர் மேற்கத்தேய நாடுகளின் அதிகார பூர்வ மனித உரிமை விதிகளை நிராகரித்து

ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக மாறுவார் என்ற சிந்தனை வாதத்திற்கு ஒப்ப உலக நாடுகள் கண்டுகொள்ளத் தயக்கம் காட்டும் அல்லது பாராமுகமாய் இருக்கும் ஈழ மக்களின் மனித பேரவலங்களில் அமதிகளின் குரல் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவுள்ளது.

தமிழ் தேசிய உணர்வுக்கான அமதிகளின் ஒத்துணர்வின் நீட்சியாக 2005 ஆண்டு மே மாதம் 2ஆம் திகதியில் ஆரம்பிக்கப்பட்ட சமாதான நல்லிணக்க பணியகம் கால ஓட்டத்தில் கரைந்துவிடாது காத்திரமான பங்களிப்பை இன்றும் செய்து வருகிறது. வன்முறையற்றதும் நீதியானதுமான ஒரு சமூகத்தை உருவாக்குவதும், சுயமானதும் முரண்பாடற்றதுமான உளமாற்றம் வழியாக சமாதானம் நல்லிணக்கம் கொண்ட உறவு நிலையை கட்டி எழுப்புவதும் இதனுடைய நோக்கமாகும். நடந்து முடிந்த யுத்த வன்முறைகளுக்கான பொறுப்பு கூறலையும், நிலை மாறு கால நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுடனான பயணமும், நில மற்றும் வாழ்வுரிமை மறுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளோடு அவர்களின் ஜனநாயகப் போராட்டத்தில் உடனிருப்பதும், பெண் தலைமைத்துவ குடும்பங்களின் சமூகப் பொருளாதார வாழ்வியல் கட்டுமானத்தில் காத்திரமான பணிகளைச் செய்வதும் நோக்கமாகும்.

தமிழ் தேசிய உணர்வலையின் 'நீக்க' அரசியலை உன்னிப்பாய் கண்டுணர்ந்து அதற்கெதிராக திரைகளுக்கு பின்னாலும், தொலைபேசி செயலிகளுக்குள்ளும் முடங்கிப் போயிருக்கும் இளம் தலைமுறையினருக்கு தேசிய உணர்வினையும் வரலாற்று உண்மைகளையும் உணர்த்த விழிப்புணர்வுகளைச் செய்வதோடு இனவழிப்பின் நிகழ்கால நிகழ்ச்சிகளில் போதைப் பாவனை விதைப்போடு உணர்வு சிதைக்கப்படலாம் என்ற மறைமுக காய் நகர்த்தல்களை தீர்க்கதரிசனமாக கட்டுணர்ந்து எதிர்வினையாற்றி "போதை அற்ற தலைமுறை நம் இன இருப்பின் அடித்தளம்" என தம் பணியை ஆற்றுகிறது.

அது மாத்திரமன்றி ஓர் இனத்தின் தேசிய உணர்வும் வாழ்வுரிமையும் அந்த நிலம் சார் ஆன்மிகத்தோடும் இயற்கை இறையியலோடும் இணைந்தது என்பதை உணர்ந்து தமிழ்த் தேசியம் எமது இனத்தின் உறைவிடத்தின் மேன்மையோடு இணைந்தது. எனவே இயற்கையுடனான ஒருங்கிணைப்பின் பணிகளைச் செய்து இன இருத்தலையும் நில, வாழ்வுரிமைக்கான வழியாக நம் வளங்களை பாதுகாக்கும் பணிகளையும் செய்து வருகிறது. கால ஓட்டத்தில் அரச/ தனியார் பயங்கரவாத வன்முறையாளர்களின் அச்சுறுத்தலில் மனித உரிமை ஆர்வலர்களாக பணியாற்றிய சில அமதிகள் இந்நாட்டை விட்டு வெளியேற வேண்டிய துர்பாக்கிய நிலையும் ஏற்பட்டது. அது எம் உடன் பணியாளர்களின் தமிழ்ச் சமூகம்சார் உயர்ந்த ஒத்துணர்வின் ஒரு சான்றாகும்.

**முடிவுரை**

ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், தமிழ் கத்தோலிக்கத் திருஅவையின் குறிப்பாக அமல மரித் தியாகிகள் சபையின் பங்களிப்பு வெறும் ஆன்மீக எல்லைகளுக்குள் சுருங்கிவிடாமல், ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வோடும் தாகத்தோடும் ஒன்றிணைந்திருந்தமை நோக்கற்பாலது. விடுதலை இறையியலின் தத்துவார்த்தப் பின்னணியில் நின்று, அநீதிக்கு எதிராகக் குரலெழுப்புவதையும் பல்வேறு வகையிலும் ஏழைகளாக்கப்பட்டோரின் விடிவிற்காகப் பணியாற்றுவதையும் தங்களின் முதன்மை அறமாகக்கொண்டு அவர்கள் செயலாற்றுகிறார்கள்.

சுவாமி ஞானப்பிரகாசரின் ஆழமான மொழி மற்றும் வரலாற்று ஆய்வுகள் தமிழர்களின் தனித்துவமான அடையாளத்தையும், அவர்களின் பூர்வகுடித் தாயகக் கோட்பாட்டையும் நிரூபிப்பதற்கான வலுவான சான்றா தாரங்களை வழங்கின. அதேபோல், அருட்தந்தை திமொத்தி லோங் அவர்களின் வழிகாட்டுதலில் உருவான யாழ்ப்பாணப் பொது நூலகமும், போர்க்கால அவலங்களுக்கு மத்தியில் தற்காப்பு அரணாக விளங்கிய தொடர்பகம் ஞானப்பிரகாசர்

நூலகமும் தமிழினத்தின் அறிவுசார் தேசியத்தையும் பண்பாட்டு அடையாளத்தையும் பேரழிவுகளில் இருந்து மீட்டெடுத்துப் பாதுகாத்தன. அரசியல் தளத்தில் துணிச்சலுடன் களமிறங்கிய அருட்தந்தை அபாரணம் சிங்கராயர் அமதி போன்றோரின் தியாகங்கள், மற்றும் இனவிடுதலை ஆன்மிகத்திற்கு அறைகூவல்விடுத்த அமதிகளின் சமய சமூகப்பரப்புரைகளும் போதனைகளுங்கூட தமிழ் மக்களின் தன்னாட்சிப் போராட்டத் திற்கு சர்வதேச அளவில் தார்மீக கவனத்தை பெற்றுத்தந்தன.

மேலும், வன்னிப் பெருநிலப்பரப்பில் போர் ஏற்படுத்திய கூட்டு மனச்சோர்விலிருந்து மக்களை மீட்டெடுத்த கிளிநொச்சி "அன்னை இல்லம்" உளவள மையத்தின் பணிகளும், இடம்பெயர்ந்த ஏழை எளிய மக்களின் வாழ்வாதார மறுவாழ்விற்காக உருவாக்கப்பட்ட "அமதிபுரம்" கிராமமும், அவலங்களின் மத்தியிலும் தணியாத மனிதாபிமான உடனிருப்பிற்குச் சான்றுகளாகும். சமாதான நல்லிணக்க பணியகத்தின் வழியாக இன்றுவரை தொடரும் மனித உரிமைப் பணிகளும், இளைய தலைமுறையினரைத் திசைமாறாது காக்கும் விழிப்புணர்வுகளும் இச்சபையின் நீக்கமற நிறைந்த அர்ப்பணிப்பைக் காட்டுகின்றன.

சுருக்கமாகக் கூறின், அமலமரித்தியாகிகளின் ஈழத்து வாழ்வும் பணியும் வெறும் ஆலய வழிபாட்டுப் பணியோடோ அல்லது சமயப் பரப்புரையோடோ நின்றுவிடவில்லை. மாறாக, அது தமிழினத்தின் மொழி, பண்பாடு, நில உரிமை மற்றும் வாழ்வியல் அடையாளங்களைக் காக்க எழுப்பப்பட்ட ஓர் அறிவுசார் மற்றும் மனிதாபிமானப் பேரரணாகும். "ஏழைகளுக்கு நற்செய்தி நவில" மற்றும் "ஒடுக்கப்பட்டோர் விடுதலை அடைய" என்ற இறைவாக்கிற்குத் தங்களின் வாழ்வாலும் பணியாலும் இரத்தத்தாலும் வியர்வையாலும் உயிர் கொடுத்த இந்த தியாகிகளின் வரலாறு, ஈழத் தமிழ் தேசிய எழுச்சியின் பிரிக்க முடியாததொரு பெரும்பங்களிப்பாக பேராயுதமாக என்றும் வரலாற்றில் நிலைத்திருக்கும்.

**உசாத்துணை நூல்கள்**


Smith, Anthony D. (1991). Nationalism: Theory, Ideology, History. Polity Press

Davis, Thomas. (1843). Our National Language.

Herder, Johann Gottfried von. (1772). Treatise on the Origin of Language

Rev. S. Gnana Prakasar, OMI (1999), XXV years catholic progress. St, Joseph's catholic press, Jaffna

Philips Jesuthasan. (2001). Our Tribute volume III – Part 2, The Oblate Study Club, Oblate Scholasticate, Ampitiya, Srilanka.

Saveripillai, E. R., & Schuetz-Mueller, J. (2014). Annai Illam: Using lay counselors to serve the trauma-related mental health needs of remote Sri Lanka. Annals of Global Health, 80(2), 122–125.

*பேரறிஞர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் முப்பொன் விழா நினைவு மலர்– 2025 யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கம், யாழ்ப்பாண மறை மாவட்டம், யாழ் அமலமரித்தியாகிகள்.*

David V. Patrick OMI, Jeevendra A. Paul OMI, and Stany Anthony OMI, Thiyagath Thoothu, OMI. Publications Vice – Province of Jaffna, Sri Lanka

கரவையூர் செல்வம், காலங்களின் கோலங்களும் பணியின் கோணங்களும்